# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்
# றொம்மன் வளாகம்

மாதாந்தப்பாடத்திட்டம் 2023- 2024

ஐப்பசி

வகுப்பு 9

அரையாண்டு கற்பித்தல் வாரங்கள் 15

**பாடம் 3: - கவியின்பம்**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | கால மாற்றங்களுக்கு ஏற்ப மக்கள் கருதும் கருப்பொருளுக்கு எற்றவாறு இலக்கியங்கள் மாற்றமடைந்துள்ளன என்பதை அறிவர்<br><br>இலக்கணம்: உவமை அணி, உருவகத் தொடர், உருவக அணி போன்றவற்றை அன்றாட வாழ்வில் பாவிக்கும் முறையை அறிதல் |
| துணைக்கருவிகள் | புகழ் பெற்ற கவிஞர்களின் படங்கள் (தமிழ்(தமிழீழம்), நோர்வேயிய கவிஞர்கள்)<br><br>காணொளிகள்<br><br>கவிதை, பாடல் உள்ள இறுவட்டுகள்<br><br>இலக்கணம் - சொல்லட்டைகள் power point<br><br>kahoot – வினாக்கள், இலக்கணம் |
| செயற்பாடு | காட்சிப்படுத்தல்<br><br>குழுச்செயற்பாடு |
| 06.10.23வெள்ளி<br><br>07.10.23 சனி | **இலையுதிர்கால விடுமுறை** |
| **வாரம் 7** | |
| 13.10.23வெள்ளி<br><br>14.10.23 சனி | **பாடத்தலைப்பு: கவியின்பம்**<br><br>கவியின்பம் என்ற பாடல்பகுதி முதல் முறையாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. பாடல்களை/ கவிதைகளை முன்னைய வகுப்புகளில் கற்றாலும் கவிதைகள் பற்றிய சிறிய அடிப்படை விளக்கத்துடன் பாடப் பகுதியினை வாசித்து விளங்கப்படுத்தல். |

| | |
|---|---|
| | கவி என்றால் என்ன? கவிச்சுவை என்றால் என்ன? என்பனவற்றை சிறு விளக்கத்துடன் கூறுதல்.<br><br>பாடத்தலைப்பு சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடுதல்.<br><br>திருகோணமலை பற்றியும் வெந்நீர்க் கிணறுகள் பற்றியும் கலந்துரையாடல்<br><br>மாணவர்களுக்குத் தெரிந்த கவிதைகள் பற்றிக் கேட்டுத் அறிந்து உரையாடுதல்.<br><br>**புதிய சொற்களை** எழுதுபலகையில் எழுதிக் காட்சிப்படுத்திக், கலந்துரையாடுதல்.<br><br>பாடத்தை மௌனமாகவும் கருத்தூன்றியும் வாசித்தல்.<br><br>ஆசிரியர் பாடத்தை வாசித்து, விளக்கம் கொடுத்தல்.<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல்)<br><br>**செயற்பாடு**<br><br>சொல்லட்டைகள் மூலம் சிறிய கவிதைகளை உருவாக்குதல்.<br><br>பயிற்சி: செயல் 4 ஆ<br><br>❖ தகவல் பெட்டகம் - கலந்துரையாடல்<br><br>ஆசிரியர் தகவல் பெட்டகத்தில் உள்ள தகவலைப் பற்றிய விளக்கத்தைக் கொடுத்தல்.சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல்.<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல்)<br><br>குழுவேலை: வினாக்களுக்கு விடை கண்டறிந்து, சரிபார்த்தல்.<br><br>வினாக்களுக்கான விடைகளைக் கண்டறிந்து, மாணவர் தாமாகவே எழுதுதல்<br><br>(வாசித்தல், எழுதுதல்)<br><br>**விளையாட்டு** - kahoot |

| | |
|---|---|
| வீட்டுவேலை | வினாக்களுக்கான விடைகள் எழுதுதல் |
| **வாரம் 8** | **பாடம் 3 கவியின்பம் தொடர்ச்சி** |
| 20.10.23வெள்ளி<br><br>21.10.23 சனி | பாடம் - மீட்டல்<br><br>பாடத்தைச் சுருக்கமாகக் கூறி, மீட்டல் செய்தல்.<br><br>வினாக்களைக் கேட்பதன் மூலம் பாடவிளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br><br>இலக்கணம் - உவமை அணி<br><br>முன்னைய வகுப்பில் கற்றதை நினைவுபடுத்தி, மீண்டும் விளக்கம் கொடுத்தல்.<br><br>உவமானம், உவமேயம், உவமையுருபு, உருவக அணி<br><br>உவமைத் தொடர்<br><br>மாணவர்களுக்குக் கற்ற பாடவிடயத்திலிருந்தும் எடுத்துக்காட்டுகளுடன் எடுத்து விளக்குதல்.<br><br>(கேட்டல், கிரகித்தல், எழுதுதல்)<br><br>பயிற்சி: **செயல் 1** வகுப்பில் செய்தல்.<br><br>**குழுச் செயற்பாடு - இணைந்து செயற்படுவோம்.**<br><br>**செயல் 2:** ஆசிரியர் ஏற்கனவே தயாரித்த நாடகத்தை மாணவர்களுக்குக் கூறி, அதனைச் சுருக்கமாக எழுதி, நடிக்க உதவிசெய்**தல்.**<br><br>**விளையாட்டு** - kahoot<br><br>(பேசுதல், வாசித்தல்) |
| வீட்டுவேலை | செயல் 4 சொல்லியம் எழுதுதல் |
| **வாரம் 9** | **பாடம் 3 கவியின்பம்** தொடர்ச்சி |
| 27.10.23வெள்ளி<br><br>28.10.23 சனி | மீட்டல் - உவமையணி மீட்டல் செய்தல்.<br><br>**கவிச்சுவை: செயல் 3** |

| | |
|---|---|
| | பாரியின் கதையை நினைவுபடுத்தி, கதையைக் கூறிக் கலந்துரையாடுதல். எமது **தாயக நினைவுகள், இடப்பெயர்வுடன் தொடர்புபடுத்தல்.**<br><br>கவிச்சுவையை விளக்குதல்.<br><br>**வகுப்பில் குறும்படம் பார்த்தல்**<br><br>மாணவர்களிடம் தாம் பார்த்த குறும்படத்தைக் கூறக் கேட்டல்.<br><br>செயல் 5: **கட்டுரை**<br><br>குறும்பட விமர்சனத்துக்கான சட்டகம் தயாரித்து, **கட்டுரை** எழுதுதல்.<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்)<br><br>**விளையாட்டு** - kahoot |
| வீட்டுவேலை | அலகு 1 - 3 வரையான மதிப்பீட்டுக்கு ஆயத்தம் செய்தல். |

**தகவல்: 23.10.23 திங்கட்கிழமை நவராத்திரிவிழா பாடசாலையில் 17.30 மணிக்கு நடைபெறும்.**